புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# குறுந்தொகை முன்னிறுத்தும் பண்பாடு – விளையாட்டுத் தரவுகள்

*முனைவர் வே.வளர்மதி*
*உதவிப்பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)*
*ஈரோடு-638012*

ஆய்வுச்சுருக்கம்

*பழங்காலம் தொட்டு இன்றைய காலம் வரை விளையாட்டை நினையாதவர் எவரும் இலர். விளையாட்டை ஆடவர் விளையாட்டு, மகளிர் விளையாட்டு எனக் கூறலாம். ஆண்கள் விளையாட்டில் எந்தளவிற்குப் பங்குகொண்டனரோ அதே அளவிற்குச் சங்ககால மகளிரிரும் பங்கு கொண்டுள்ளனர். புலவர்கள் சங்கப்பாக்களில் அகம், புறம் எனும் செய்திகளைக் கூறுமிடத்து விளையாட்டையும் இணைத்துக் கூறியிருப்பதால், அன்றைய கால மக்கள் விளையாட்டோடு இரண்டறக் கலந்திருந்தனர் என்பது தெளிவாகின்றது. சங்க இலக்கியமான எட்டுத்தொகையில் உள்ள குறுந்தொகை எனும் நூலில், புலவர்கள் சுட்டியுள்ள விளையாட்டுகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

திறவுச்சொற்கள்

*பண்பாடு, விளையாட்டு, போர் விளையாட்டு, புனல் விளையாட்டு, சிறுதேர்,*

*பண்பாடு என்பது உலகம் முழுவதற்கும் பொதுவானதாகும். மாந்தர்தம் பழக்கவழக்கங்கள் நம்பிக்கைகள் கலை உணர்வுகள் நீதி நெறிமுறைகள் வழிபாட்டு நெறிகள் முதலானவற்றில் அவர்தம் பண்பாடும் மிளிரும். மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது அவர்தான் பண்பாட்டுக் கூறுகளே ஆகும். தமக்கென வாழாது பிறருக்கு உரியவராக வாழ்தலும், அமுதமே கிடைப்பினும் பிறருக்கு கொடுத்து தாம் உண்ணுதலும் பண்பாடு மிக்கவர் இயல்பு எனலாம். பழந்தமிழ் இலக்கியங்கள் வழி தமிழரின் வாழ்வியல் சார்ந்த பண்பாட்டுக் கூறுகளை அறிய முடிகிறது.*

*"எளியோரிடத்தும் இனிமையாக பேசுவதும் புதிதாக வந்த ஒழுக்கம் உள்ள அயலாரை விருந்தோம்புவதும் இறப்போர்க்கு இடுவதும் இயன்றவரை பிறருக்கு உதவுவதும் கொள்கையும் மானமும் கெடின் உயிரை விடுவதும் தமிழரின் பண்பாட்டுக் கூறுகளில் குறிப்பிடத்தக்கனவாகும்" என டா. தேவநேயன் கூறுவார் (1956:8). இதனை,*

*“புகழுமுன்னர்நாணுப*
*பழியாங் கொல்பவோ காணுங் காலே.” (குறுந்தொகை-252)*

*எனும் குறுந்தொகை அடிகள் மூலம் அறிய முடிகின்றது.*

*சங்க இலக்கியம் நமக்கு பல பண்பாட்டுக் கூறுகளைக் கூறுகின்றன. அதனுள் ஒன்றே ஈதல் இசைபட வாழ்தல் அதுவே உயிருக்கு ஊதியம் என இயங்குகிறது.*

*"காமம் சான்ற கடைக்கோட் காலை*
*ஏமம் சான்ற மக்களொடு துவன்றி*
*அறம் புரி மக்களொடு கிழவனும் கிழத்தியும்*
*சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே"*
*- தொல். பொருள். கற்பியல் (சூத்திரம் 51)*

*என தொல்காப்பியம் வாழ்வின் இலக்கைக் கூறுகின்றது.*

நால்வகை பொருளையும் அடைதலே அன்றைய பண்பாட்டின் நோக்கம். தானே முயன்று பொருளீட்டும் பண்புடையவர் சங்ககால மக்கள். தம் முன்னோர் தேடி வைத்த பொருளை உண்ணுவது இல்லை. இதனால் திருமணத்தை முன்வைத்து பொருள் வயிற் பிரிந்து சென்றனர். தான் தேடிய பொருள் இல்லாமல் முன்னோர் ஈட்டிய செல்வத்தினை செலவு செய்பவர் இரந்து வாழ்பவருக்கு ஒப்பாவர் என்பதனை,

*"உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்*
*இல்லோர் வாழ்க்கை இரவினும் இளிவெனச் " (குறுந்தொகை.283)*

என்ற குறுந்தொகை பாடல் குறிப்பிடுகின்றது.

தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்தலும், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலும் , சமதர்மபடிகளாகும். இப்படி ஒருமுறை வளர்ச்சியை குறுந்தொகை இலக்கியத்தில் காண முடிகிறது. இதனை,

*"மெல்லியல் அரிவைநின் னல்லகம் புலம்ப*
*நிற்றுறந் தமைகுவெ னாயின் எற்றுறந்*
*திரவலர் வாரா வைகல்*
*பலவா குகயான் செலவுறு தகவே. " (குறுந்தொகை.137)*

என்ற அடிகள் மூலம் அறிய முடிகிறது.

உலகம் என்பது உயிர் கூட்டங்களின் தொகுப்பு மேலும் அது எல்லோருக்கும் பொதுவானதாகும். உயிரினங்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக இருந்தபோதிலும் இடம், வாழ்வு, திணை என்ற அடிப்படையிலேயே பல்வேறு கூறுகளாக பகிர்ந்து கிடக்கின்றன. இதைப்போன்ற மானுட இனமும் தன்னகத்தை ஒரே உயிரின் வகையாக இருந்த போதிலும் நிலம், குடி ,தொழில் ,மொழி போன்ற பல்வேறு காரணங்களால் பிரிந்து கிடக்கின்றது. இது மாதிரியான வேறுபாடுகள் காணப்படுவது இயற்கையே.

மானுட சமுதாயத்தில் காணப்பட்ட வேறுபாடுகள் மறைவதற்கு பண்பாடு என்ற வளர்ச்சி நிலை காரணமாக இருந்தது. அத்தகைய பண்பாடு உருவாவதற்குத் தனிமனிதச் சிந்தனையும் ஒருங்கிணைவும் அவசியமாகும். இத்தகைய நிலை தமிழரிடையே உருவாவதற்கு பல ஆண்டுகள் ஆகி இருக்கலாம் இருந்தபோதிலும் மற்ற இனத்தவரிடம் ஒப்பிடுகையில் போரும் பகை போன்ற வேறுபாடுகள் நிறைந்த காலகட்டத்தில் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்ற உலகப் பொதுமையை 2000 ஆண்டுகளுக்கு முன்பு புறநானூறு கூறியிருப்பது உயரிய சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகிறது. இக்கருத்தினை அக்காலத்தை உரைத்த பொதுவுடமை சிந்தனை என்றால் அது மிகையாகாது.

விளையாட்டுக்கலை

பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றின் பிறப்பிடம் தமிழகம் எனலாம். ஆயக்கலைகள் 64 என்று முன்னோர்கள் கூறினாலும் மனிதனது செயல்பாடுகள் அனைத்தும் கலைகளே என்று கருத இடமுண்டு. தமிழரின் விளையாட்டுகள் அவற்றின் ஒரு கூறாகும். தமிழக மக்களின் நாகரீகத்தோடும்,பண்பாட்டோடும், விளையாட்டும் இணைந்ததாகும். விளையாட்டு என்பது வெளி தூண்டல்கள் இன்றி மகிழ்ச்சியூட்டும் செயல்களில் இயற்கையாக ஈடுபடுவதாகும். விளையாட்டை மனமகிழ்ச்சி ஊட்டும் செயல் எனலாம் அவ்விளையாட்டு பொழுது போக்காக மட்டுமின்றி உடல்நலம் மனநலம் பேணுபவையாககவும் உள்ளது.

தொல்காப்பியரும் விளையாட்டும்

விளையாட்டு என்பதற்குப் புலவர்கள் சரியான ஒரு வரைமுறையைத் தரவில்லை. இருப்பினும், தமிழில் கிடைத்துள்ள மிகத் தொன்மையான இலக்கண நூலகக் கருதப்படும் தொல்காப்பியம் விளையாட்டு பற்றிய ஒரு சில செய்திகளை முன்வைத்துச் செல்கின்றது.

*“செல்வம் புலனே புணர்வுவிளை யாட்டென*
*அல்லல் நீத்த உவகை நான்கே” (தொல்-மெய்ப்பாட்டியல்-11)*

மெய்ப்பாட்டியலில் தொல்காப்பியர் உவகை எனும் மெய்ப்பாடு தோன்றும் நான்கு களன்களில் விளையாட்டும் ஒன்று எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், பழங்கால மக்கள் விளையாடும் விளையாட்டு முறைகளை வைத்து அவற்றைக் கெடவரல் என்றும், பண்ணை என்றும் குறிப்பிடுகிறார்.

*“கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு” (தொல்-உரி. 21)*

கெடவரல் என்பது நிலத்தில் விளையாடும் விளையாட்டையும், பண்ணை என்பது நீரில் விளையாடும் விளையாட்டையும் குறிக்கின்றது.

விளையாட்டின் வகைகள்

விளையாட்டுகளை பொதுவாக,

1. அக விளையாட்டு
2. புற விளையாட்டு

என இரு பிரிவுகளாக பிரிக்கலாம்.

இவ்வகையில்"மகளிர் விளையாட்டுகளும் குழந்தைகள் விளையாட்டுகளும் முதல் வகையிலும், ஆடவர் விளையாட்டுகளும் சிறுவர் விளையாட்டுகளும் இரண்டாம் வகையிலும் அடங்கும்" என்பர் இரா பாலசுப்ரமணியம் (2003:4).

வீட்டின் உள்ளே விளையாடுவது அக விளையாட்டு என்று கூறுவர். புற விளையாட்டு என்பது வெளியில் சென்று விளையாடுவது ஆகும். சோலை விளையாட்டு, நீர் நிலைகள் போன்றவற்றில் விளையாடுவது புற விளையாட்டு ஆகும். விளையாட்டை பால் அடிப்படையிலும் வயது அடிப்படையில் வகைப்படுத்தலாம்.

1. சிறுவர் விளையாட்டு
2. சிறுமியர் விளையாட்டு
3. சிறுவர் சிறுமியர் விளையாட்டு
4. ஆடவர் விளையாட்டு
5. மகளிர் விளையாட்டு

என இரா பாலசுப்ரமணியம் (2003:6) வகைப்படுத்துகின்றார்.

மள்ளர் போர் விளையாட்டு

"திருவிழா நாட்களில் வீரர்கள் கூடித் தத்தம் சேரிகளில் விளையாட்டுப் போர் நிகழ்த்துவர். இதனை சேரிப்போர் என்றும் மள்ளர் விழவு என்றும் வழங்குவர். வீரத்தை உயிரெனக் கொண்ட ஆடவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தும் பொருட்டும் வீரர்களில் உடலில் புண் பட்டால் அதனை விழுப்புண்ணாக கருதி மகிழ்வர். சேரிகளில் விளையாட்டு போர் நிகழ்த்திய செய்தியினை,

"மள்ளர் குழீஇய விழவி னானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டுங் காணேன் மாண்டக் கோனை
யானுமோ ராடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோ ராடுகள மகனே". (குறுந்தொகை-31)

என்ற வரிகள் மூலம் அறிய முடிகிறது.

"சங்ககாலத்தில் ஆண் மகன் வீரம் செறிந்தவனாக இருந்தான். இதனையே தாய், மனைவி போன்ற பெண்களும் விரும்பினர்" என்பார் இரா விஜயராணி(2007:939). மள்ளர் போரில் வென்றவர்க்கு பெண் ஒருத்தியை மணம் செய்து வைப்பர் என்ற செய்தியை குறுந்தொகை பாடல் மூலம் அறிய முடிகின்றது. இதனை,

"கண்பொர மற்றதன் கண்ணவர்
மணங்கொளற் கிவரும் மள்ளர் போரே." (குறுந்தொகை.364)

என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது. இப்பாடலை நோக்கும் போது இது ஒரு வீர விளையாட்டாக மருதத்திணையில் நடந்தேறியது எனவும், முல்லை நிலத்தில் ஏறு தழுவி வெற்றி பெறும் ஆணுக்கு பெண்ணை மணம் செய்து வைப்பது போன்று, மருதம் நிலத்திலும் நடந்தேறி இருக்கிறது என்ற செய்தியை நாம் அறிய முடிகிறது.

கோழிப்போர் விளையாட்டு

கோழிப் போரானது மருத நிலத்தில் நடைபெறும் ஒன்றாகும். வீரத்தில் நாட்டமுடைய சங்க கால மக்களின் வீர விளையாட்டுகளுள் வேடிக்கையான விளையாட்டு கோழிப்போர் ஆகும். கோழிகள் போரின் பொருட்டு வளர்க்கப்பட்டு அப்போரில் ஊக்கமுடையோரால்

உய்க்கப்படும். சேரிக் கோழிப்போர் பெருந்திரளான மக்களிடையே நிகழும். குப்பைக்கோழி போர் உய்ப்பாரும், களைவாரும் காண்பாரும் மகிழ்வாரும் இலதாயிற்று இதனை,

" குப்பைக் கோழித் தனிப்போர் போல
விளிவாங்கு விளியி னல்லது
களைவோர் இலையா னுற்ற நோயே. " (குறுந்தொகை.305)

என்னும் வரிகள் புலப்படுத்துகின்றன. மக்களால் போர்பயிற்சி அளிக்கப்பட்டாலும் படாவிட்டாலும் கோழிகளுக்கு இயற்கையிலேயே போர் உணர்வு இருந்தது. அதனால்தான் சங்க காலம் முதல் இன்று வரையிலும் கோழிப்போர் மக்களின் கண்களுக்கு விருந்தளிக்கும் விளையாட்டாக நிலை பெற்றுவிட்டது எனலாம்.

அக்கால கோழிப்போர் இக்காலத்தில் சேவல் சண்டையாக நிகழ்த்தப்படுகிறது. சண்டையிடும் சேவலினை வழக்கில் 'சண்டைச் சாவல்' என அழைக்கின்றனர். இச்சேவற் சட்டையைக் 'கத்திக்கட்டுச் சேவற்போர்' ,'வெற்றுக்கால் சேவற்போர்' என்று இரு வகையில் நடத்துகின்றனர். சண்டையிடும் சேவல்களில் காலில் கூர்மையான சிறிய கத்தியினைக் கட்டி ஒன்றோடு ஒன்று மோதவிடுவதை 'கத்திக்கட்டுச் சேவற்போர்' எனவும், கத்தியின்றி மோத விடுவதை 'வெற்றுக்கால் சேவற்போர்' எனவும் கூறுவர். இத்தகைய சேவற்போர்கள் இன்றைய தமிழகத்தில் விழாக்காலப் பொழுது போக்குப் போராகவே நடத்தப்படுகிறது. இவைகளுக்கென்றே தனிக்கழகங்களும் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கவண் விளையாட்டு

குறிஞ்சி நில மக்கள் தினைப் புனத்தில் கிளிகளை விரட்டிய போது பாடிய பாடல் பின்வருமாறு,

" ஏனல் காவலர் கவணொலி வெரீஇக்
கான யானை கைவிடு பசுங்கழை" (குறுந்தொகை.54)

இப்பாடலில் தினைப்புனத்தில் தினையைக் காவல் புரிபவர் விடுகின்ற கவண் ஒலிக்கு காட்டு யானைகள் அஞ்சி ஓடின என்ற செய்தி கூறப்படுகிறது.

பந்து விளையாட்டு

பந்துகளைக் கொண்டு ஆடப்படும் ஆட்டம் பந்தாட்டம் என அழைக்கப்படுகிறது. சீவக சிந்தாமணியில் விமலே என்ற பெண் ஐந்து பந்துகளை வைத்துக்கொண்டு நிலத்தில் விழாமல் அடித்து ஆடிய செய்தியினை விமலையார் இலம்பகத்தின் வழி அறிய முடிகிறது. சங்ககாலத்தில் மகளிர்க்கு மட்டுமே உரிய விளையாட்டாக இது விளங்கியது. பந்தாட்டமென்றும் இவ்வாட்டத்தை பொழுதுபோக்கிற்காகவும், போட்டிக்காகவும் விளையாடியுள்ளனர். தலைவனுடன் தலைவி உடன்போக்கு சென்ற பின் செவிலித்தாய் தலைவியின் இளமைப் பருவத்தை நினைத்து வருந்துகிறாள். அப்போது தலைவி இடைவிடாமல் விளையாடும் இயல்புடையவள் என்பதைக் கூறுகிறாள். இதை,

"பாலும் உண்ணாள் பந்துடன் மேவாள்
விளையாடு ஆயமொடு அயர்வோ ளினியே" (குறுந்தொகை.396)

எனக் குறுந்தொகை பொழிகிறது.

"பந்தாட்டம்,நீராடல், ஊஞ்சலாடல் என்ற மூன்று விளையாட்டுகளும் உடல் நலத்திற்காக மனதை ஒருமுகப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட விளையாட்டு" என்பார் பி.பார்வதி ( 2005:645).

இப்பந்து விளையாடலைப் பற்றி சிற்றிலக்கியத்தில் ஒன்றான குற்றால குறவஞ்சியில் திரிகூட ராசப்ப கவிராயர் வசந்த சவுந்தரி பந்து விளையாட்டினை விரும்பி விளையாடுவதை அழகாக கூறுகிறார். இதனை,

" செங்கையில் வண்டு கலின்கலின் என்று
செயம் செயம் என்றாட இடை
சங்கதம் என்று சிலம்பு புலம்பொடு
தண்டை கலந்தாடஇரு
கொங்கை கொடும்பகைவென்றனம் என்று
குழைந்து குழைந்தாடமலர்ப்
பைங்கொடி நங்கை வசந்த

சவுந்தார் பந்து பயின்றனளே'' (திருக்குற்.குற.20)

மகளிர்க்குரிய விளையாட்டாக பந்து விளையாட்டு இருந்தது என்பதை சங்க இலக்கியம் வாயிலாக அறிய முடிகிறது . இன்று உலக அளவில் பல நிலைகளில் பல வடிவங்களில் பந்து விளையாடப்படுகிறது. இவ்விளையாட்டு இன்று எறிபந்து, பூப்பந்து, கூடைப்பந்து, வளைப்பந்து, கால்பந்து, தண்ணீர் பந்து என்று வளர்ச்சி பெற்று இவைகளை ஆடவரும் விளையாடும் நிலையினைக் காணலாம்.

"அக்காலத்து மகளிர் இக்காலத்துப் பெண்மணிகளைப் போன்று பந்தாடினார்கள் என்றால் இப்போது ஆடப்படுகின்ற பேட்மின்டன், டென்னிஸ் போன்ற விளையாட்டுகளை அவர்களும் விளையாடினார்கள். பழைய காலத்துப் பெண்மணிகள் ஆடிய பந்தாட்டம் வேறுவிதமாக இருந்தது. அவர்கள் ஆடிய பந்துகள் நெட்டி ,மயில் இறகு, கம்பளி மயிர் போன்ற லேசான பொருள்களால் செய்யப்பட்டு, வெண்மை நிறமாகவும், கருமை நிறமாகவும், செம்மை நிறமாகவும் அமைந்து காண்பதற்கு அழகாக இருந்தன "என்பார் மயிலை சீனி வேங்கடசாமி(2005:68).

வண்டல் விளையாட்டு

அரும்பின் பூக்களைக் கொய்து வயல்வெளிகளிலும், மணலிலும் மகளிர் விளையாடுவது இவ்விளையாட்டாகும். இதனைக் குறுந்தொகை பின்வருமாறு தெரிவிக்கிறது,

"கடலுட னாடியும் கான லல்கியும்
தொடலை யாயமொடு தழுவணி யயர்ந்தும்". (குறுந்தொகை. 294)

இப்பாடல் மகளிர் கடலில் நீராடிய பின் கடற்கரைச் சோலையில் இருந்து விளையாடிய தன்மையினை குறிப்பாகக் கூறுகிறது.

" துணைத்த கோதைப் பணைப்பெருந் தோளினர்
கடலாடு மகளிர் கான லிழைத்த" (குறுந்தொகை. 326)

மேற்கூறிய பாடலைப் போன்றே இதிலும் கடலில் நீராடிய பின் மணலில் இருந்து விளையாடிய தன்மையினை காணலாம். இதனை நற்றிணையிலும் காணலாம்.

" வண்டல் ஆயமொடு பண்டு தான் ஆடிய
ஈனாப் பாவை தலையிட்டு ஓரும்" (நற்றிணை.127)

தலைவி தோழியரோடு வண்டல் விளையாடுவதற்கு ஈனாப்பாவையைத் தலையில் வைத்துக் கொண்டாள் என்பதை மேற்கண்ட பாடல் அடி தெரிவிக்கின்றது.

ஓரை விளையாட்டு

"ஓரை என்பது கடற்கரை மகளிர் கடற்துறையின் வெண்மணலிடத்தே தம்முள் ஓடிப் பிடித்து ஆடி மகிழும் ஒருவகை விளையாட்டு 'ஓர்தல்' அடிப்படையாதலால் ஓரை எனப்பட்டது"(முத்து.பாண்டியம்மாள்,2006:780). இந்த ஓரை விளையாட்டு இன்றைய கண்ணாமூச்சி விளையாட்டு ஒப்பிடத்தக்கதாகும்.

விளையாட்டு மகளிரைக் கண்டு நண்டுகள் அஞ்சிக் கடலுக்குள் ஓடிய போது தலைவனும் நகைக்த்து விளையாடியதனை,

"ஓரை மகளிர் அஞ்சி, ஈர் ஞெண்டு
கடலில் பரிக்கும் துறைவனொடு, ஒரு நாள்,
நக்கு விளையாடலும் கடிந்தன்று, (குறுந்தொகை.401)

என்னும் வரிகள் விவரிக்கின்றன.

விளையாட்டுப் பெண்கள் நண்டினை விரட்ட அஞ்சி ஓடும் நண்டுகளை அலைகள் காப்பாற்றும் என்பதனை,

"உரவுக் கடல் பொருத விரவு மணல் அடைகரை
ஓரை மகளிர் ஓராங்கு ஆட்ட,
ஆய்ந்த அலவன் (படம்) துன்புறு துனைபரி
ஓங்கு வரல் விரிதிரை களையும்" (குறுந்தொகை.316)

என்று கூறுகிறது.

விளையாட்டு மகளிர் தலைவிக்கு தலைவன் விரைவில் வந்து உன்னை மணப்பார் என்று சொல்வார். கலங்காதே என ஆறுதல் கூறும் பாங்கில் ஓரை மகளிர் (தோழிகள்) அமைந்துள்ளனர். ஆறுதல் கூறும் பண்பும் விளையாட்டு மகளிர்க்கு உண்டு என்பதை இப்பாடல் எடுத்துக் கூறுகிறது. இதனை,

"இன்ன பண்பி னினைபெரி துழக்கும்
நன்னுதல் பசலை நீங்க வன்ன
நசையாகு பண்பின் ஒருசொல்
இசையாது கொல்லோ காதலர் தமக்கே." (குறுந்தொகை.48)

மகளிர் விளையாட்டுக்கள் மன மகழ்ச்சிக்காகவும், செயல்படுபவனாக உள்ளன. "பெண்கள் விளையாடும் போது தங்கள் திறமைகளை இரு வழிகளில் வெளிப்படுத்துகின்றனர். ஒன்று விளையாட்டு, மற்றொன்று விளையாட்டின் மூலம் ஏற்படும் ஒற்றுமை உணர்வு என்பார்" இரா பாலசுப்ரமணியன்(2003:21)

சிறுதேரோட்டல்

இவ்விளையாட்டானது சிறுவர்கள் விளையாடும் விளையாட்டு ஆகும். தச்சனால் செய்யப்பட்ட சிறிய குதிரை பூட்டிய சிறு தேரின் மீது ஏறிச்செலுத்தி சிறுவர்கள் அதனைக் கையால் இழுத்து இன்பம் காண்பர். தேரினை உருட்டியும், இழுத்தும் சிறுவர்கள் விளையாடினர் என்பதை,

" தச்சன் செய்த சிறுமா வையம்
ஊர்ந்தின் புறாஅர் ஆயினுங் கையின்
ஈர்த்தின் புறூஉம் இளையோர் போல" (குறுந்தொகை.61)

என்ற பாடல் மூலம் அறியலாம்.

பனங்குரும்பையில் உருளை செய்து இயற்றிய சிறுதேரை மணலில் இழுத்து சிறுவர்கள் விளையாடினர் என்பதை,

" கால் பல்கலையின் இயக்கி நடைபயிற்றா
ஆல்மர்ட் செல்வன் அணிசொல் பெருவிரல
போல வரும் என உயிர்" (கலித்தொகை.80)

என்ற கலித்தொகை பாடல் வழி அறிய முடிகிறது.

சிற்றிலிழைத்தல்

சிறுமியர் மணல் வீடு கட்டி விளையாடும் விளையாட்டு சிற்றழைத் தலாகும். இவ்விளையாட்டு அவர்களிடையே பொறுப்புணர்ச்சியை ஊட்டுகிறது. கடற்கரையின் அருகே எழிலோடு அமைந்த கானற் சோலையில் சிற்றிலிழைத்து மகிழ்ந்தனர் என்பதை,

" துணைத்த கோதைப் பணைப்பெருந் தோளினர்
கடலாடு மகளிர் கான லிழைத்த
சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி" (குறுந்தொகை.326)

என்ற குறுந்தொகை பாடல் மூலம் மணல் வீடு கட்டி மகிழ்ந்ததை அறியலாம். இப்பாடலில் சிறுமனைப் புணர்ந்த நட்பு என்பதற்கு சிற்றிலிழைக்கு விளையாடியிருந்த பருவத்திலேயே அவனோடு நட்பு கொண்டாள் என்று தலைவியின் அகச்சிறப்பினை எடுத்துக் கூறுவதாகவும் இப்பாடல் அமைந்துள்ளது.

பாவை விளையாட்டு

பாவை விளையாட்டு என்பது சிறிய பசிய தாது முதலியவற்றால் செய்யப்பட்ட பொம்மை போன்றதாகும். இதனை வைத்து சிறுமியர் விளையாடுவர் இது எவ்வாறு செய்யப்பட்டது என்பதனை,

"தாதிற் செய்த தண்பனிப் பாவை" (குறுந்தொகை.48)

பாவையை ஈன்றெடுத்த குழந்தையைப் போல் பேணி மணம் செய்வித்து விளையாடுவர். குறுந்தொகையில் பசுமையான நெய்தல் பூக்கள் பரவி கிடந்த இடத்தில் தாயானவள்

*குழந்தையை தூங்க வைத்து தொட்டிலில் கிடத்துவது போன்ற செய்திகள் அமைகின்றன என்பதை,*

*" நெய்தற் பரப்பிற் பாவை கிடப்பி*
*நின்குறி வந்தனென் இயல்தேர்க் கொண்க". (குறுந்தொகை.114)*

*என்ற பாடல் அடிகள் தெரிவிக்கின்றன இவ்விளையாட்டின் தன்மையையே இது பெண்களுக்குரியது என்பதை விளக்கும். குறுந்தொகையில் பாவை பற்றிய சொல் பல இடங்களில் வருகின்றன. அவை, ஆடிப் பாவை(8), குடவரை எழுதிய நல்லியப் பாவை(89), கொல்லிக் குடவரைப் பார்வை(100), மயிலின் பீலி கண்ணைப் போன்ற பாவை(184), நன்கு அலங்காரம் செய்யப்பட்ட பாவை(195), புனத்தில் உள்ள புதிய வரகினை ஆன்மா மேய்ந்ததால் பார்ப்பதற்கு பாவை போன்று தோற்றமளித்தல்(220), பொன்னால் செய்யப்பட்ட பாவை(292), பஞ்சினால் செய்யப்பட்ட பாவை(276), சிறு பசுந்ததுக்களால் செய்யப்பட்ட பாவை(278).*

*இவை அனைத்தையும் நோக்கும் போது சங்ககாலத்தில் பெண்கள் பொம்மை போன்று பாவை விளையாட்டினை விளையாடி வந்தார்கள் என்று அறிய முடிகிறது. மேலும், பெரியவர்கள் வாழ்க்கையினைக் கண்டு அதுபோல சிறுமியர்கள் வாழ்க்கை வாழப் பழகிக் கொண்ட விதமும் அதுபோன்ற விளையாடிய விதமும் குறுந்தொகையில் பல இடங்களில் காணப்படுகின்றன. மேலும் பெண்ணின் விளையாட்டுக்கள் இல்லறக் குறிப்புகளுடன் அமைந்துள்ளன.*

*நீர் சார்ந்த விளையாட்டுக்கள்*

*நீரில் விளையாடுதல் என்பது சிறு குழந்தை முதலில் விருப்பமுடைய ஒன்றாகும். நீரை காணும் போது ஒரு பெரும் புத்துணர்வு ஏற்படும் மன அழுத்தம் குறையும் உளச்சோறும் உடல் சோர்வும் நீக்கும் தன்மை நீருக்குண்டு. சுனை விளையாட்டு,புனல் விளையாட்டு, அருவி விளையாட்டு, கடல் விளையாட்டு போன்றவை நீர் விளையாட்டுகள் ஆகும். சுனை விளையாட்டு என்பது தினைப்புனங்காக்கச் சென்ற மகளிர் தம் களைப்பினைப் போக்கும் பொருட்டு அருகில் இருக்கும் சுனையில் நீராடி விளையாடுவதாகும். இதனை,*

*"நிரை வளை முன்கை நேர் இழை மகளிர்*
*இருங் கல் வியல் அறைச் செந் தினை பரப்பிச்*
*சுனை பாய் சோர்வு இடை நோக்கி, சினை இழிந்து," (குறுந்தொகை.335)*

*என்ற பாடல் அடிகள் உணர்த்துகின்றன. நீரில் நெடுநேரம் விளையாடினால் கண் சிவக்கும் என்பதை*

*" நீர்நீ டாடிற் கண்ணுஞ் சிவக்கும்" (குறுந்தொகை.335)*

*என்னும் வரி தெரிவிக்கிறது.*

*கடல் விளையாட்டு மகளிர்க்கு மிகவும் விருப்பமான விளையாட்டுகளில் ஒன்றாகும். விளையாடும் பொழுது குழுவாக சேர்ந்து விளையாடினர் என்பதை அறிய முடிகிறது. கடலில் விளையாடிய பின்னர் கடற்கரை சோலையிலிருந்து பிற விளையாட்டுகளும் விளையாடினர் என்பதை,*

*"கடலாடு மகளிர் கான லிழைத்த*
*சிறுமனைப் புணர்ந்த நட்பே தோழி" (குறுந்தொகை.326)*

*என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.*

*சங்க இலக்கியத்தில் பெரும்பாலும் நிலத்தில் ஆடப்படுகின்ற விளையாட்டோடு சேர்ந்து நீரில் ஆடப்படும் விளையாட்டின் குழுவாக சேர்ந்து விளையாடியுள்ளனர் மேலும் மனதிற்கு மகிழ்ச்சியையும் நட்பு உணர்ச்சியையும் தூண்டும் விதமாக குழு விளையாட்டு அமைந்துள்ளது எனலாம். ஆயமொடு கூடி விளையாட வேண்டுமென்று பழந்தமிழர் விரும்பினர். இல்லத்தில் அடைந்து கிடந்தால் பயனில்லை என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். உடலுக்கு நலனும் உள்ளத்திற்கு மகிழ்வும் தருவது விளையாட்டே என்பதை தமிழர்கள் உணர்ந்திருந்தனர். ஒருவர் மற்றவர்களோடு கூடி வாழும் நாட்டு நலத்தையும் பண்பாட்டையும் விளையாட்டு தருகிறது.*

துணைநூற்பட்டியல்


1. *சக்திதாசன் சுப்பிரமணியன்(உ.ஆ), குறுந்தொகை மூலமும் உரையும், முல்லைப் பதிப்பகம், சென்னை. பதிப்பு.2008*
2. *காந்தி, தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. பதிப்பு.2003*
3. *பாலசுப்பிரமணியன்.இரா, தமிழர் நாட்டு விளையாட்டுக்கள், உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. பதிப்பு.2003*
4. *பாலசுப்பிரமணியம். கு.வெ, சங்க இலக்கியக் கொள்கை, மோனார் கிராபிக்ஸ், சென்னை. பதிப்பு 2008*
5. *ஜெகதீசன்.இரா. (ப.ஆ), குறுந்தொகை ஆய்வுக்கோவை தொகுதி 1,2,3, சங்க இலக்கிய ஆய்வு மையம், குறிஞ்சி பதிப்பகம், மதுரை. பதிப்பு- 2006*


********* ********* ********** ********* ********* ********** ********** **********